# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 59 — 1973 මැයි 11 වැනි සිකුරාදා — 1973.05.11

59 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 445 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | எல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

படகன்வில மின்தறி வேலைக்களத்தில் முள்ளுக்கம்பி வேலிய மைப்பதற்குரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் 1973.5.31 ந் தேதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் 5,000/- ரூபாவோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்களைப் பெற 1973 1973.5.30 ந் தேதி நண்பகலோ, அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக்கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்தல் வேண்டும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/46)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.4.30.

5-208—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மொறட்டுவை, வெலோனாவிலுள்ள மெருகூட்டும் பொறித் தொகுதிக் கட்டிடத்திற்கு அஸ்பெஸ்ரஸ் உட்கூரையமைப்பதற்குரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் 1973.05.31 ம் தேதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் 5,000/- ரூபாவோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்கள் பெற 1973.05.30 ந் தேதி நண்பகலோ, அதற்கு முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக் கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/45)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.04.30.

5-209—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தலைவர், கேள்விப்பத்திர சபை, சிறு கைத்தொழில் இலாகா, ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1, அவர்கள் 1973.06.26 ந் திகதி காலை 10 மணி வரை கம்பள நெசவு நூலுக்கான கேள்விப்பத்திரங்களை உற்பத்தியாளர்களிடமிருந்தும், உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்வார்.

2. முழு விபரங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் தயவு செய்து சிறு கைத்தொழில் இலாகாவுக்கு விண்ணப்பிக்கவும்.

தொடர் இல : 3/1—(2/16)
சிறு கைத்தொழில் இலாகா,
கொழும்பு 1,
1973.04.30.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

5-211—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

பொலிதலின் வைக்கோல் 1000, ருத்தல் 3000 வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்களைத் தயாரிப்பவர்கள் அல்லது தயாரிப்பவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து 1973.07.11 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்விப்பத்திரப் படிவங்கட்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தொடர் இல : 3/1—(4/34)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.04.30.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் அதிபர்.

5-210—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | 6.4.73 | வெள்ளி .. | 28.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| மே | 4.5.73 | வெள்ளி .. | 25.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி .. | 2.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி .. | 9.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி .. | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| யூன் .. | 1.6.73 | வெள்ளி .. | 23.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 30.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 6.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 13.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 20.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் த.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.